

அரசின் சேவைகள் மக்களின் வீடுகளுக்கே சென்றடைய வேண்டும் என்ற உன்னத நோக்கில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட "உங்களுடன்_ஸ்டாலின்" திட்டத்தின் சிறப்பு முகாம்களின் ஒருபகுதியாக, கரூர் மாநகராட்சி, காந்திகிராமம் உழவர் சந்தை அருகில் நடைபெற்ற சிறப்பு முகாமில், வார்டு 39ஐ சேர்ந்த பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் கரூர் மாவட்ட ஆட்சியர் தங்கவேல், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# "களத்தில் நம் அரசு" திருவாரூர் மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை பணிகள் தீவிரம்!

*திருவாரூர், அக்.23-*

*தமிழ்நாட்டில் வேக மெடுக்கும் வடகிழக்கு பருவமழை தீவிரமாகும் நிலையில், தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் "களத்தில் நம் அரசு" என்கிற மக்களுக்கு நம்பிக்கையூட்டும் திட்டங்களால் பருவமழை பாதிப்புக்களில் இருந்து மக்களையும் ,கால்டைகளையும், விவசாயத்தையும் காக்கும் வகையில் அரசு எந்திரங்களை மக்களோடு நிற்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவருகிறார்.*

*இந்த நிலையில் திருவாரூர் மாவட்டத்திற்கு ரெட் அலர்ட் கொடுக்கப் பட்டிருக்கும் நிலையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின்படியும், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்ட கழகச்செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர்களின் ஆலோசனைகளின்படியும், மாவட்டம் முழுவதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர் மோகனசந்திரன் தலைமையிலான அரசுநிர்வாகம் மக்கள் பாராட்டும் வகையில் திறம்பட பணியாற்றிவருகிறது.*



*முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படும் விபரங்கள் அனைத்தும் பேரிடர் மேலாண்மை நிர்வாகம் மூலம், பொது மக்களுக்கு அவ்வப்போது செய்திமக்கள்தொடர்புத் துறை தகவல்களும் தெரியப்படுத்தி வருகிறது.கழக அரசின் இந்த நடவடிக்கைகள் பொதுமக்களை பீதிகளை இருந்து காப்பறும் விதமாகவும், பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமாகவும் அமைந்திருப்பது பாராட்டும்விதமாக அமைந்துள்ளது. வட்டாட்சியர்கள், செயல் அலுவலர்கள், அரசுத் துறை அதிகாரிகள் இவர்களுடன் மக்கள் பிரதிநிதிகள், கழக தோழர்களும் பருவமழை முன்னெச்செரிக்கை நடவடிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.*

*மாவட்டத்தில் 176 பகுதிகளில் வெல்ல பாதிப்பு இருக்கலாம் என கண்டறியப்பட்டு கண்காணிக்கப் படுகிறது. 20 மருத்துவக்குழுக்கள் அமைக்கப்பட்டுள் என. மீட்பு பணிகளுக்கு என 327 ஜெ.சி.பி.க்களும், 322ஜெனரேட்டர்களும் ,352 மின் மோட்டார்களும், 586 மரம் அறுக்கும் கருவிகளும், 39 படகுகளும் தயார்நிலையில் உள்ளன. 34000 மணல் மூட்டைகளும் தயாராக உள்ளன.*

*இந்த நிலையில் திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் தேர்வு நிலை பேரூராட்சி பகுதியில் குடவாசல் ரோடு, கும்பகோணம் ரோடு, செட்டி தெரு, மாரியம்மன் கோவில், கைலாசநாதர் தெற்கு வீதி, ஆகிய பகுதிகளில் மழை நீர் தேங்கிய பகுதிகளில் தூய்மை பணியாளர்கள் கொண்டு மழைநீர் வடிய வைக்கப்பட்டது*

*நல்லமாங்குடி வடக்கு தெரு மற்றும் வார்டு எண் 6 சன்னாநல்லூர் பகுதியில் தேங்கி இருந்தது மழைநீர் வெட்டி வடியப்பட்டது மற்றும் மழைநீர் வடிகால் சுத்தம் செய்யப்பட்டு உள்ளது தண்ணீர் தேங்காத வண்ணம் சரி செய்யப் பட்டு வருகிறது .வார்டு 8 சவுக்கத்தெரு பகுதியில் ஜேசிபி மூலம் மழைநீர் வடிய வைக்கும் பணி நடைபெற்றது.*

*கூத்தாநல்லூர் வட்டம்,45.கிளியனூர் வருவாய் கிராமம், சோழாட்சி உட்கிராமத்தில் இன்று 21 102025. காலை 8:45 மணியளவில் அறுந்து விழுந்த மின் கம்பிகள் . உடனதியாக மின்சார வாரியம் மூலம் சரி செய்யப் பட்டது.*

*நன்னிலம் பேரூராட்சியில் வார்டு எண் 5 சன்னாநல்லூர் தூத்துக்குடி தார் தொட்டி தெரு பகுதியில் தேங்கி இருந்தது மழைநீர் ஜே சி பி மூலம் வெட்டி வடியப்பட்டது தண்ணீர் தேங்காத வண்ணம் சரி செய்யப்பட்டது .*

*குடவாசல் பேரூராட்சி பகுதியில் அத்திக்கடை சமத்துவபுரம் மற்றும் பிடாரி கோயில் தெரு பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீர் வடிய வைக்கும் பணி நடைபெற்றது .*

*நன்னிலம் பேரூராட்சியில் வார்டு எண் 5 சன்னாநல்லூர் தூத்துக்குடி தார் தொட்டி தெரு பகுதியில் தேங்கி இருந்தது மழைநீர் ஜே சி பி மூலம் வெட்டி வடியப்பட்டது தண்ணீர் தேங்காத வண்ணம் சரி செய்யப்பட்டது*

*குடவாசல் வட்டம், அகர ஓகை கிராமம், வலங்கைமான் மெயின் ரோட்டில் சாலை ஓரத்தில் சாய்ந்துள்ள மரம் வெட்டும் பணி தொடர்பாக அந்தப் பகுதிக்கு செல்ல மின் நிறுத்தம் செய்யப்பட்டதை உறுதி செய்து வட்டாட்சியரால் ஆய்வு செய்யப்பட்டது*

*நன்னிலம் வட்டம், முடிகொண்டான் கிராமத்தில் சகடமங்கலம், கருப்பூர், பொறக்குடி, போலகம் உள்ளிட்ட கிராம மக்கள் பயன்படுத்தும் இரயில்வே கீழ்பாலம் ஆய்வு செய்யப்பட்டது.*

*மன்னார்குடி வட்டம் தலையாமங்கலம் கிராமம் ஆதிதிராவிடர் தெருவில் சூழ்ந்திருந்த மழை நீர் ஊரக வளர்ச்சித் துறையின் ஒருங்கிணைப்புடன் வெளியேற்றப்பட்டது. அப்பகுதியில் குடியிருப்பவர்களுக்கு எந்த ஒரு பாதிப்பும் இல்லை என்பதும் உறுதிசெய்யப்பட்டது.*

*முத்துப்பேட்டை வட்டம் பாண்டி ஊராட்சி சிவன் கோயில் தெரு மழை நீர் வடிகால் சீரமைத்தல் மற்றும் சிவன் கோவில் தெரு மேலத் தெரு ஆகிய சாலை ஓர கருவேல் மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.*

*குடவாசல் வட்டம் உத்தரங்குடி கிராமம் கோனாற்றில் ஆகாயத்தாமரை அடைக்கப்பட்டது புது பொதுப்பணித்துறை மற்றும் பொதுமக்களுடன் சேர்ந்து அகற்றப்பட்டது .திருவாரூர் வட்டம் திருவாரூர் நகரம் அழகிரி காலணியில் குடியிருப்புகளை சுற்றி தேங்கி இருந்த நீரை வெளியேற்றப்பட்டது*

*மழைவெள்ள பாதிப்புகளுக்கு உதவிகோரிட மாவட்ட நிர்வாகம், 9043989192, 9345640279 , 04366 226623 , 04366 1077 உள்ளிட்ட தொலைபேசி எண்களையும், திருவாரூர் நகராட்சிக்கு 8300899655, 04366242205 உள்ளிட்ட எண்களையும் பொதுமக்களுக்கு கொடுத்துள்ளது.*



வடகிழக்கு பருவ மழையால் பாதிப்படைந்த ஈரோடு மாவட்டம் கொங்கார் பாளையம் ஊராட்சி தரைமட்ட பாலத்தினை வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அதுபோது மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், கள்ளிப்பட்டி மணி, சிந்து ரவிச்சந்திரன், கோபி நகர் மன்ற தலைவர் என்.ஆர்.நாகராஜ், சிறுவலூர் எஸ்.எ.முருகன், பொ.ராமச்சந்திரன், கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## வடகிழக்குப் பருவ மழையை முன்னிட்டு அடையாறு –

# வேளச்சேரி - சோழிங்கநல்லூர் - ஆதம்பாக்கம் பகுதிகளில் முன்னேற்பாட்டுப் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு!

சென்னை, அக். 23-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.10.2025) வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகளையொட்டி, தயார் நிலையில் உள்ள நிவாரண மையங்கள், உணவு தயாரிக்கும் கூடங்கள், உணவுக் கூடங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள், சீரமைக்கப்பட்டுள்ள வெள்ளநீர் கடத்தி கால்வாய்கள் மற்றும் ஆகாயத் தாமரை அகற்றும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அடையாறு காமராஜ் அவென்யூ முதல் தெரு சென்னை ஆரம்பப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சமையல் கூடத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்தார்.

வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணிகளையொட்டி, வேளச்சேரி பறக்கும் ரயில் திட்ட சாலைப் பகுதியில் கால்வாய் தூர் வாரப்பட்டுள்ள தால் அப்பகுதி பாலத்தின் 6 கண்கள் வழியே நீர் தடையின்றி செல்வதையும் துணை முதலமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, சென்னை சோழிங்கநல்லூர் நாராயணபுரம் ஏரியிலிருந்து பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வரை 44.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 கண் நீர் ஒழுங்கியுடன் 850 மீ. நீளத்தில் 1,100 கன.அடி வெள்ள நீர் கடத்தும் திறனுடைய இரண்டு கண் கொண்ட கூடுதல் பெரு மூடு வடிகால்வாய் அமைக்கப்பட்டதால் நீர் தடையின்றி செல்வதை துணை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சோழிங்கநல்லூர் பகுதியில் கீழ் கட்டளை உபரி நீர் கால்வாயில் ராட்சத இயந்திரங்களைக் கொண்டு தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப் படுவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தென் சென்னையில் ஆதம்பாக்கம் பகுதியில் தேங்கும் மழை நீரை வேளச்சேரி வழியாக பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதிக்கு கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் வீராங்கல் ஓடையில், ரூ.5.60 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகள், ஓடையின் கரையோரங்களில் 1 மீட்டர் உயரத்திற்கு அமைக்கப்பட்டுள்ள தடுப்புச்சுவர், ஓடைக்குள் குப்பைகள் தேங்காமல் இருக்க, தடுப்பு சுவருக்கு மேல் 1.60 மீட்டர் அளவுக்கு கம்பி வலை (Chain Link Mesh) அமைக்கப்பட்டுள்ளதையும் துணை முதலமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் ஆதம்பாக்கம் கக்கன் பாலம் அருகே வெள்ளநீரை வெளியேற்ற 100 ஹெச்.பி திறனுடைய மேட்டார் பம்ப் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ராஜலட்சுமி நகர் பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை மேல்நிலைப் பள்ளியில் தற்காலிக நிவாரண மையத்திற்கான வசதிகள் குறித்து துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், நீர்வளத்துறைச் செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், உள்பட அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.ஆர். கோவிந்தன்

### அக்டோபர் 23 (2021)



**தனது இளமைக் காலத்திலிருந்தே தீவிரமாக கழகப் பணியில் ஈடுபட்டு வந்தவர்.**

**சென்னை, அண்ணா நகர் பகுதியில் மாவட்ட பிரதிநிதி, வட்டச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**2006ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கங்காதீஸ்வரர் கோவில் அறங்காவலர், புரசைவாக்கம் கூட்டுறவு வங்கி இயக்குநர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.**

**சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களை முன்னெடுத்தி நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு எட்டு முறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆசிரியர் வெ.கோவிந்தன்

### அக்டோபர் 23 (2021)



**ஆசிரியராகப் பணியாற்றி வந்த இவர், கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, தனது ஆசிரியர் பணியை துறந்து, 1977ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.**

**பேர்ணாம்பட்டு நகர பொறுப்பாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட துணைச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**1989, 1996 ஆகிய இரண்டு முறை பேர்ணம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**சென்னை பல்கலைக் கழக செனட் உறுப்பினர், நகர வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.**

**சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**